# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.59/2025 | Date | : 29.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : துரைசாமி | Calling | : |
| Father Name | : கந்தசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 29.10.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கோனேரிபட்டி கிராமம், பாலிருசம்பாளையத்தில் வசித்து பவர் லூம் தொழில் செய்து வருகிறேன். கடந்த 06-01-2025ம் தேதி, மதியம் சுமார் 02.00 மணியளவில் கோனகழுத்தானூர் திருப்பத்தில் உள்ள வெங்கடேஸ்வரா பேக்கரியில் நான் டீ குடித்துகொண்டிருந்தேன். அப்போது, ஒரு இருசக்கர வாகனம் ஒன்று குமாரபாளையம் நோக்கி வந்து வெங்கடேஸ்வரா பேக்கரியில் டீ குடிப்பதற்காக திரும்பியது. அவர் தார் சாலையை கடந்து மண்ரோட்டின் அருகே வந்துவிட்டார்.

2) அப்போது, எதிர் திசையில் வந்த பொலிரோ பிக்-அப் வாகனம் வேகமாக வந்து இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டது. மோதியவுடன் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சுமார் 06லிருந்து 07 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டார். அவருக்கு தலையில் அடிப்பட்டு, காதில் ரத்தம் வந்துகொண்டிருந்தது. வலது

தோள்பட்டையிலும், இடது காலிலும் அடிப்பட்டது. பின்னர், அடிப்பட்டவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை :-</u>

1) விபத்தில் இறந்தவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் ஒரே பகுதியை சார்ந்தவர், அவரை எனக்கு சிறு வயதில் இருந்தே தெரியும். நான் எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் நான் பவர்லூம் எனது வீட்டில் வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 02 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கும், வெங்கடேஸ்வரா பேக்கரிக்கும் எவ்வளவு தூரம் என்றால் வெங்கடேஸ்வரா பேக்கரிக்கு எதிரே தான் சம்பவம் நடந்தது.

2) நான் டீ குடித்து கொண்டிருந்தபோது பேக்கரியில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10-15 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேனா என்றால் அவர் பேக்கரிக்கு வரும்போதே நான் பார்த்தேன். விபத்தை ஏற்படுத்திய பொலிரோ பிக் அப் வாகனம் எவ்வளவு தூரத்தில் வரும்போது பார்த்தேன் என்றால் பார்க்கவில்லை, அடிப்பட்டவர் வந்த இருசக்கர வாகனத்தை தான் பார்த்தேன். பொலிரோ பிக் அப் வாகனம் எவ்வளவு வேகத்தில் வந்தது என்றால் அது எனக்கு தெரியாது.

3) விபத்தில் இறந்தவர் தலைகவசம் அணியவில்லை. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. விபத்தில் இறந்தவர் சாலையில் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்து வந்திருந்தால் இந்த விபத்து

ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல, அவர் நின்று பார்த்து தான் வந்தார். பேக்கரியில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் வெற்று தாளில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இலலை. என்னை போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோதும் நான் அடிப்பட்டவருடன் அரசு மருத்துவமனை சென்றேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

4) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவத்தின்போது நான் பேக்கரியில் டீ குடிக்கவில்லை என்றும், போலிசார் கேட்டுகொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது வெங்கடேஸ்வரா பேக்கரியில் இல்லை என்பது சிசிடிவி கேமராவை பார்த்தால் தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் ஒரே ஊரை சார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Duraisamy

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.